உ
சிவமயம்



வடமராட்சி

துன்னையம்பதி இந்திரனம்மன் கோவிலடி வாசரும்

உயர்சைவ வேளாண்குல திலகருமாகிய

# அமரர் திருமதி சவுந்தரம் விநாயகமூர்த்தி

அவர்களின்

பிரிவு குறித்த

# நினைவுமலர்

21.06.1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி சவுந்தரம் விநாயகமூர்த்தி



மண்ணுறவு

09.10.1922

விண்ணமர்வு

22.05.1998

திதி வெண்பா

---------

நின்றவெகு தானியத்து வைகாசி ரேவதியில்
அன்றபர ஏகாதசி என்றுரைத்த - வெள்ளியது
வென்றதிதி யாகும் சவுந்தரம் இப்பிறப்பை
சென்றார் சிவனின் கழல்.

(S) Computer Unit, Viyaparimoolai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், வடமராட்சி
துன்னையம்பதி இந்திரனம்மன் கோயிலடியை
வசிப்பிடமாகக் கொண்டவரும், மேழிக்கொடியுயர்த்திய
சைவவேளாண்குல சங்கரஉடையார் வழிவந்த
காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பாக்கியம் தம்பதியினரின்
மகளும், விநாயகமூர்த்தியின் அன்புத்துணைவியுமான
**சவுந்தரம்** அவர்களின் பிரிவுகுறித்த

# நினைவுமலர்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செம்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்
உருவாக்கும் ஆதலால் வானோர்கள் ஆனைமுகத்தானை
காதலால் கூப்புவர் தம் கை.

## தேவாரம்

தந்தையார் தாயாருடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போ றேதோ
மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ் மதியும் வாளரவந் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழு வார்க் கிருவிசும்பு விருக்கலாமே.

## திருவாசகம்

பாடிமால் புகழும் பாதமே அல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப் பெருந்து றையுறை சிவனே
ஊடுவதுன்னோ டுவப்பதும் உன்னை
உணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை என்றால்
அஞ்சலென் றருள் செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைந்த செஞ்சாலிக்
கடைசியர் களைதரு நீலஞ்
செய்வரம் பரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீசர்க்
காட்செய்மின் குழாம் புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று மென்று முள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டு நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க வென்றார்.

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்கில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்ல
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தறன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோந்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உன் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வாய்
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

## பட்டினத்தார் பாடல்

(அன்னை காலமான பின் தகனக்கிரியை செய்யும் போது
பாடிய பாடல்கள்)

---

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச் – செய்யஇரு
கைப்புறத்தில் ஏந்தி கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி ?

முந்தித் தவம்கிடந்து முந்நூறுநாள் சுமந்தே
அந்தி பகலாய்ச்சிவனை ஆதரித்துத் –தொந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்.

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து–முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன் ?

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே– அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்.

அரிசியோ நான் இடுவேன் ? ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்–உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே எனஅழைத்த வாய்க்கு ?

அள்ளிஇடுவது அரிசியோ ? தாய்தலை மேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் ?–மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு.

முன்னை இட்டதீ முப்புரத்திலே
பின்னை இட்டதீ தென் இலங்கையிலே
அன்னை இட்டதீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே!!

வேகுதே தீயதனில் ; வெந்து பொடிசாம்பல்
ஆகுமே பாவியேன் ஐயகோ! – மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ–சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்துஎன்
தன்னையே ஈன்றெடுத்த தாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீற்றிருந்தாள் அன்னை, வீதிதனில் இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் –பால்தெளிக்க
எல்லாரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!

இந்திரனம்மன் துதி

ஆத்தாளை எங்கள் அபிராமியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்தாளை புவியடங்க
காத்தாளை சங்கு சடாசரம் குசமும் கரும்பாங்கை
சேர்த்தாளை முக்கண்ணியை தொழுவார்க்கு தீங்கில்லையே.

வல்லியானந்தப் பிள்ளையார் துதி

எல்லையில்லா துயரங்கள் நீக்கினாய் ஓம் கணபதியே
ஈடில்லா செல்வங்கள் ஈந்தாய் ஏகந்தனே ஏகந்தனே
கல்லுநேர் நெஞ்சத்தில் குடிகொண்டருள் புரிவாய்
விநாயகனே
வள்ளலே, ஆதிமூலவனே, அருள்புரிவாயே.

மனைத்தெய்வம் காளி

வீட்டிலே கோயி லொன்று விருப்புட னாக்கி யங்கே
ஈட்டருச் செல்வ மாக இரவோடு பகலும் போற்றும்
நீட்டிய சூலம் கைக்கொள் நிறையெழிற் காளித் தாயே
தாட்டுணை இரந்து நின்றேன் தருகநின் அருளே யம்மா.

**கணவன் புலம்பல்**

குழலுக் கிசைந்த வகை மாலை கொண்டே குற்றேவல்
தூங்காமல் தூங்கி உன்சுகத்தைத் தான் துறந்து
மாலையொடு காலையும் மகிழ்ந்து பொங்கும் மனதுடனே
குறையாமல் இரைதேடிக் கொடுப்பாயே தினந்தோறும்
கள்ளக் கருத்தையெல்லாம் கட்டோடு வேரறுத்து
கஞ்சா அபினியுடன் கள்ளுண்டு வாடாமல்
பஞ்சாமிர்தம் பருக்கிப் பார்புகழப் பார்த்தவளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர் என்று கேட்டதுவும், அறிவு வந்து பார்த்ததுவும்
கண்ணாலே அருவி கசிந்துருக நின்றதுவும்
எப்படி நான் மறப்பேன் எக்காலம் இதை விடுப்பேன்.
ஆறாத புண்ணில் அழுந்திக் கிடவாமல்
நீரில் குமிழிபோல் நிலையற்ற வாழ்வை விட்டாய்
காசாரம் ஏறும் யமன் உன்னைக் கைப்பிடித்துக்
கொண்டானோ
தூண்டு விளக்கணைத்து தொடர்ந்திருளும்
சூழ்ந்ததுவோ?
கொல்லன் உலை போலக் கொதிக்குதடி என்மனது
நில்லென்று சொன்னாலும் நிலைநிறுத்த மறுக்கிறதே.

## மகன் புலம்பல்

ஈர் ஐந்து திங்கள் எமையெல்லாம் சுமந்தாயே!
சீர் ஆறும் பெற்று சிறந்து நிற்க வைத்தாயே!
பார் போற்றிக்கொள்ள புகழ் எமக்கீட்டிக் கொடுத்தாயே!
யார் இருந்தும் என்ன பயன் எமைத் தவிக்கவிட்டுப்
போனாயே!

அன்னம் பகிர்ந்திங்கு அலைந்தோர்க்கு உதவிசெய்த
ஜென்மம் எடுத்த எங்கள் ஜெகசோதி மாதாவே
உன்பற்று ஒளிய ஒரு பற்றுமெனக் கில்லையம்மா
ஆற்றிடவே வழியில்லாமல் அழுதழுது தவிக்கின்றேனே!

## பெண்மக்கள் புலம்பல்

முப்போதும் அன்னம் புசித்திடவும், தூங்கிடவும்
இப்போதும் எம்மை இயன்றளவும் பார்த்தவளே
கண்ணின் மணியாய் கருதி நின்ற பேரொளியே
காண்போமா இனிவாழ்வில் கலங்கவிட்டுச் சென்றாயே!

வேடிக்கையும் சொகுசும் பொய்ப்பகட்டும் வெறுத்து எம்மை
காலத்திற் கேற்றவாறு கைப்பிடித்துக் கொடுத்தவளே
உன்நோயைக் குணமாக்கி உருப்படுத்திப் பார்க்க நின்றோம்
உற்றிடத்தைத் தேடி உறங்கிடநீ சென்றாயோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

மனத்தால் குறிப்பறிந்து மருமக்கட் கேற்றபடி
குணத்தால் குறைவில்லை கோவிலே நோய் உனக்கு
பரகதிக்கு வழிஎன்று பற்றிக் கொண்டதுவோ
பாவனை யுளான வெல்லாம் விட்டு நீங்கி
வாகான உடலுயிரை இழந்திட்டாயே
வழி சொல்ல எமக்கு இனி யாருள்ளாரோ!
உற்றொழிந்து வாடுகின்றோம் உலகில் நாமே
உலகிலுனை இனியெப்போ காண்போம் மாமி.

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

அந்தோ! நினைக்க உடலனலாகி நிற்கிறதே
வெந்தோ நீஇப்பிறப்பை விட்டுவிட்டுப் போகின்றாய்
விக்கிப் பற்கிட்ட விழிவழியே நீர் வழிய
தத்தி மடிமேலே தவழ்ந்ததை நாம் நினைந்தழுவோம்.

## பீட்டப்பிள்ளைகள் புலம்பல்

பாட்டியே உனைப்போலே பாரில் எமக்குறுதி
காட்டினியே , கட்டியணைத்துக் கதைகள் கூறினியே
சிந்தை தவிக்கிறதே தேறேனே என்கிறதே
நெஞ்சு பொருமிட நாம் துஞ்சி யழுகின்றோமே!

## உறவினர், அயலவர்கள் புலம்பல்


தஞ்சமெனக் கேட்டவர்க்கு தயங்காமல் உணவளித்து
உடன்பிறந் தார்போலவே உதவிநின்ற உன்பிரிவு
மடை திறந்த வெள்ளம்போல் மனமுருக எம்சோகம்
சொல்லாலே சொல்லுதற்குச் சொல்லே இல்லையம்மா!

## தேற்றம்

மோட்சமது பெற்றுச் சென்றிட்ட சவுந்தரிபோல்
எல்லோரும் போவதியல்பே எமக்கின்னுமேன் கவலை
இன்றுள்ளோர் நாளை இருப்பதுவும் பொய்யெனவே
மன்றுள்ளோர் சொல்லும் வகையறிந்து தேறிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நமது குடும்ப விளக்கு திருமதி.விசவுந்தரம் அவர்களின் மறைவின்போதும், அந்தியேட்டிக்கிரியைகள், சபண்டீகரணத்தின் போதும் சமூகம் தந்து பங்குபற்றி உதவிய உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் இன்னும்பல உதவி, ஒத்துழைப்பு நல்கிய அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வணக்கம்.

இங்ஙனம்.

- கணவன், மக்கள், மருமக்கள் -

துன்னாலை
21.06.98.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org